இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை; நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும். ஏனென்றால் முட்செடிகளில் அத்திப் பழங்களைப் பறிப்பாருமில்லை; முட்புதர்களில் திராட்சைக் குலைகளை அறுத்துச் சேர்ப்பாருமில்லை. நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்.” (லூக்கா 6:43-45)

# ‘ஏழைகளின் சார்பில்: திருத்தந்தை , அமெரிக்க ஆயர்கள் தாராளமான குடியேற்றக் கொள்கையை வலியுறுத்துகின்றனர்

சமீபத்திய வாரங்களில் திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் பல அமெரிக்க ஆயர்கள் தாராளமான அமெரிக்க குடியேற்றக் கொள்கைகளுக்கு அழைப்பு விடுத்துள் ளனர், அமெரிக்காவில் குடியேறுபவர்கள் இயன்றவரை இங்கு இருக்க அனுமதிக்கும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை ஆதரிக்குமாறு தலைவர்களையும் வழக் கறிஞர்களையும் வலியுறுத்துகின்றனர்.

## பிப்ரவரி 10 ஆம் தேதி எழுதிய கடிதம்.

கடந்த பிப்ரவரி 10 ஆம் தேதி எழுதிய கடிதத்தில், திருத்தந்தை பிரான்சிஸ், அமெரிக்க ஆயர்கள் தாராளமான குடியேற்றக் கொள்கைகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்றும், கத்தோலிக் கர்கள் குடியேற்றச் சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் நியாயத்தை மக்களின் கண்ணியம் மற்றும் உரிமைகளின் வெளிச்சத்தில் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.




அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் துணை அதிபர் ஜே.டி.வான்ஸின் ஆகியோர், அங்கீகரிக்கப்படாத குடியேற்றவாசிகளை பெருமளவில் நாடுகடத்துவதற்கான முடிவைக் கண்டிக்கும் வகையில் எழுதப்பட்ட கடித்தத்தில், "அதிக வறுமை, பாதுகாப்பின்மை, சுரண்டல், துன்புறுத்தல். சீரழிவு போன்ற காரணங்களுக்காக பல சந்தர்ப்பங்களில் சொந்த நிலத்தை அல்லது நாட்டை விட்டு வெளியேறியவர்களை நாடு கடத்துவது" நியாயமாகாது. இது ஒரு சிறிய பிரச்சினை அல்ல: அனைத்து மக்களுக்கும், குறிப்பாக ஏழைகள் மற்றும் மிகவும் ஒதுக்கப்பட்டவர்களுக்கு தகுதியான கண் ணியமான நடத்துமுறை ஒரு உண்மையான சட்ட விதி துல்லியமாக சரிபார்க்கப்பட வேண்டும் என்று திருத்தந்தை கடிதத்தில் வலியுறுத்தினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் நீண்ட காலமாக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் மீதான அக்கறையை தனது முக்கிய போராட்ட அங்கமாக கருதி வருகிறார். செல்வம் மிக்க நாடுகளை தங்கள் தாயகங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டவர்கள் அல்லது சிறந்த வாழ்க்கைக்காக புலம்பெயர்ந்தவர் திரும்ப ஏற்று, அவர்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் குடியிறுப்பு வளங்களை வழங்குமாறு தொடர்ந்து அழைப்பு விடுத்தார்.

இதற்கிடையில், டிரம்ப் சட்டவிரோதமாக அல்லது செல்லத்தக்க கடப்பிதழ்கள் இல்லாமல், கள்ளத்தனமாக நாட்டிற்குள் நுழைந்த மில்லியன் கணக்கான சமீபத்திய குடியேறியவர்களை வெளியேற்றுவதாக உறுதியளித்தார்,

திருத்தந்தை தனது கடிதத்தில் "ஒரு நாட்டின் உரிமையை அங்கீகரித்து, நாட்டிற்கு வருவதற்கு முன்பு அல்லது நுழைவதற்கு முன்பு வன்முறை அல்லது கடுமையான குற்றங்களைச் செய்தவர் களிடமிருந்து அமெரிக்க மக்க்ளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தோட்டத்தைப் புறக்கணிக்கவில்லை.

ஆயினும்கூட, "ஒழுங்கு மற்றும் சட்டப்பூர்வ இடம்பெயர்வு" கூட "ஒவ்வொரு மனிதனின் சமமான கண்ணியம் பற்றிய உண்மையை" மாற்றக்கூடாது என்று அவர் கூறினார்.

திருத்தந்தையின் இந்த கருத்துக்கள் புலம் பெயர்ந்தோரை மிகவும் சாதகமான முறையில் நடத்துவதற்கு அமெரிக்க ஆயர்கள் எடுத்த முயற்சியின் பலனாக வெளியிடப்பட்டது. லாஸ் ஏஞ்சல்ஸ் பேராயர் ஜோஸ் கோம்ஸ் இந்த மாத தொடக்கத்தில், ஒவ்வொரு நாட்டுக்கும் தங்கள் எல்லைகளைக் கட்டுப்படுத்தும் "முக்கியமான கடமை" இருந்தாலும், "எல்லைச் சுவர்களுக்கும் கதவுகள் தேவை’தான் என்றார

இது குறித்து மேலும் கருத்துரைக்கையில், துணை அதிபர் திருஅவை “நாட்டின் குடியேற்ற அமைப்பை உடைக்கவில்லை," என்று அவர் கூறினார், "ஒவ்வொரு நாளும் நாங்கள் அந்த உடைந்த அமைப்பால் ஏற்படும் மனித சேதங்களை சமாளிக்கிறோம்," கடத்தல்காரர்களால் பாதிக்கப்பட்ட புலம்பெயர்ந்தோர் மற்றும் தெற்கு எல்லையை கடந்து போதைக்கு அடிமையானவர்கள் உட்பட அமெரிக்கர் களைப் பாதுகாக்கும் பொறுப்பில் உள்ளோம் என்றார்.

தொடர்ந்து ஆயர்கள், "அமெரிக்காவில் பயங்கரவாதிகள் அல்லது வன்முறை குற்றவாளிகள் என்று அறியப்பட்ட ஆவணமற்ற குடியேறியவர்களை நாங்கள் விரும்பவில்லை என்பதை நாங்கள் அனைவரும் ஒப்புக்கொள்கிறோம்," என்று பேராயர் கூறினார். ஆனால் "நமது எல்லைகளை முதலில் கடக்க அனுமதித்த பழைய அமைப்பை நாம் இன்னும் சரிசெய்ய வேண்டும்." என்று அக்கடிதத்தில் ஆயர்கள் கருத்துரைத்துள்ளனர்.

தமிழாக்கம்: ஆர்.கே.


# ஏழைகளிடையே இறையன்புடன் சேவையாற்றும் Gaudium et Spes அமைப்பு

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் வெளியிட்ட ஏடுகளுள் ஒன்றான Gaudium et Spes, அதாவது மகிழ்வும் எதிர்நோக்கும் என்ற ஏட்டின் பெயரில் குழு ஒன்றை உருவாக்கி பிறரன்பு பணிகளை ஆற்றிவரும் அமைப் பின் ஏறக்குறைய 80 பிரதிநிதிகளை வெள்ளிக்கிழமையன்று திருப்பீடத்தில் சந்தித்து உரை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டின் Gaudium et Spes வழங்கும் படிப் பினைகளுக்கு ஏற்ப ஏழைகளுக்கு உதவும் அவர்களின் பணிகளைப் பாராட்டிய திருத்தந்தை, ஒரே உடலின் அங்கத் தினர்களாக உலகளாவிய சகோதரத்துவ உணர்வுடன் இயேசுவில் ஒன்றித்து, ஏழைகளுடன் ஒருமைப்பாட்டில் ஆற்றிவரும் பணிகளுக்கு தன் பாராட்டுக்களை வெளியிட்டார்.

கிறிஸ்துவில் நாம் வாழ்வது என்பது ஒரே மாண்புடைய ஒரு குடும்பமாக, மற்றும் உடன்பிறந்த உணர்வுடையவர்களாக நம்மை மாற்றுவதோடு, திருப்பலியில் திருநற்கருணை என்னும் உணவை ஒன்றிணைந்து உண்ணவும் அழைக்கிறது எனவும் கூறினார் திருத்தந்தை .

எவ்வித பாகுபாடும் இன்றி அனை வரையும் அணுகிச்சென்று அவர்கள் நடுவே இறையன்பின் கருவிகளாகச் செயல்பட தூய



மனிதநேயத்துக்குரிய திருத்தந்தை

ஆவியார் நமக்கு வழிகாட்டுகின்றார் என Gaudium et Spes அமைப்பிடம் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், துயருறும் மக்களை இறைவன் அரவணைத்து ஆறுதல் வழங்குகிறார் என்பதை அவர்களி டையே பணிகள் வழியாக உணர்த் திவரும் இக்குழுவினர், எதிர்நோக்கின் ஆதாரங் களாக இருக்கிறார்கள் என் பதையும் எடுத்துரைத்தார். மனிதநேயம் மற்றும் இயற்கையுடன் சரியான உறவைப் பேணிக் காப்போம்.

**நம் இதயங்களை மாற்றுவோம்**
**நமது வாழ்வு முறையை மாற்றுவோம்**
**நமது பொதுக் கொள்கைகளை மாற்றுவோம்!**

# பினாங்கில், பாஸ் உறுப்பினரோடு ‘சப்பாத்தி’ உணவோடு நட்புறவு பேணப்பட்டது

பினாங்கு: கடந்த சனவரி 27 அன்று, 'உலக அமைதி மற்றும் ஒன்றாக வாழ்வதற்கான மனித சகோதரத்துவம்' குறித்த 2019 (’Human Fraternity for World Peace and Living Together’) அபுதாபி பிரகடனத்தில் உள்ளபடி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்புக் கேற்ப நடைபெற்றது, "சப்பாத்தி காலை" உணவு கூட்டம் நிகழ்வுற்றது.

Lajnah Dakwah PAS Pulau Pinang தொகுத்து வழங்கிய இந்த நிகழ்வானது, முஸ்லிம் மற்றும் கத்தோலிக்க சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களை ஒன்றிணைத்து, உறவு பாலங்களைக் கட்டுவதற்கும் நெருங்கிய புரிந்துணர்வை



பாஸ் உறுப்பினர்களுடன் ஆயர் கர்தினால் பிரான்சிஸ் அவர்களும் குழுவினரும்

வளர்ப்பதற்கும் அவர்களின் அர்ப் பணிப்பை வெளிப்படுத்தியது.

ஒரு எளிய ஆனால் அர்த்தமுள்ள சப்பாத்தி உணவை ஒன்றாகப் பகிர்ந்து கொள்வது, ஒற்றுமையின் சக்திவாய்ந்த அடையாளமாக விளங்கியதோடு, நட்பின் பிணைப்பை வலுப்படுத்தி மனிதநேயத் தின் ஆழமான உணர்வை ஊக்குவிக்கும் நிகழ்வாகவும் இந்த ஒன்றுகூடல் அமைந்தது.

மாண்புமிகு அமீர் ஹம்சா, பினாங்கு ஆயர் கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களை அன்புடன் வரவேற்றார். திருமதி ஜூட் மிராண்டா, பினாங்கு மறைமாவட்டத்தின் பேரருட் தந்தை, மவுண்ட் மிரியம் புற்றுநோய் மருத்துவ மனையின் நிர்வாகத் தலைவர் மற்றும் கிறிஸ்டோபர் குஷி, சட்ட அதிகாரி ஆகியோரை வரவேற்றார்.

கூட்டத்தில் மஜ்லிஸ் ஸுரா உலமாக் பிஏஎஸ், துவான் குரு ஹெச்ஜே அஹ்மத் அலி ஆகியோரும் கலந்து கொண்டனர்; Lajnah Dakwah PAS மாண்புமிகு அமீர் ஹம்சா ஹாஷிம்; Lajnah Dakwah PAS இன் துணைத் தலைவர் Pusat Tuan Hj. அப்துல் ரஹ்மான் மற்றும் பிற பாஸ் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

பெர்மாதாங் பாசிரின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு அமீர் ஹம்சா தனது வரவேற்பு உரையில், கர்தினால் செபஸ்தியன் மற்றும் பினாங்கு கத்தோலிக்க மறைமாவட்ட உறுப்பினர் களுடன் நட்புறவை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இந்த ஒன்றுகூடல் இளைய தலைமுறையினருக்கு ஒரு முன்மாதிரியாகவும், சகவாழ்வு உணர் வையும், இணைந்து செயல்படும் திறனையும் வெளிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார். துவான் குரு ஹாஜி அகமது அலி அவர்கள், இஸ்லாம் நேர்மறையான மனித உறவுகளை வளர்ப்பதற்கும் அனைத்து மக்களிடையே அன்பை வளர்ப்பதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை வலியுறுத்தினார்.

கர்தினால் செபஸ்தியன் பினாங்கு ஆயராக நியமிக்கப்பட்டதில் இருந்து பாஸ் உடன் வளர்ந்த வலுவான நட்பு குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

நட்பு, ஒத்துழைப்பு மற்றும் PAS இன் அரசியல் பங்கிற்கு, மலேசியாவில் நல்லாட்சியின் முக்கியத்துவத்திற்காக பகிரப்பட்ட உறுதிப் பாட்டை அவர் எடுத்துரைத்தார். நல்லிணக்கமும் சகோதரத்துவ உறவும் நாட்டின் வளர்ச் சிக்கு இன்றியமையாதவை என்பது வலியுறுத்தப்பட்டது.

# என் அத்தை ஜாக்கியோடு நம்பிக்கை மற்றும் உத்வேகத்தின் பயணம் (சிறப்பு கட்டுரை)

ஜாக்கி அல்லது ஜாக் என்று அன்புடன் அழைக்கப்படும் என் அன்பான அத்தை ஜாக்குலின் அந்தோனியின் வாழ்க்கையை நான் ஆழ்ந்த வருத்தத்துடனும் நன்றியுடனும் நினைத்துப் பார்க்கிறேன். இந்த பெயர் புகழ்பெற்ற ஜாக்குலின் கென்னடியால் ஈர்க்கப்பட்டது, மேலும் அவரது பெயரைப் போலவே, என் அத்தையும் அரவணைப்பையும் துடிப்பையும் வெளிப்படுத்தினார், அவளைச் சுற்றியுள்ள அனைவரின் வாழ்க்கையையும் ஒளிரச் செய்தார். அவள் முன்னிலையில் இருப்பது சூரிய ஒளியில் மூழ்குவது போல் உணர்ந்தேன், அவளுடைய அசைக்க முடியாத அன்பு, ஆதரவு மற்றும் ஊக்கம் என் வாழ்நாள் முழுவதும் ஆறுதலின் நிலையான ஆதாரமாக இருந்தது.

என்னைப் பொறுத்தவரை, என் அத்தை ஒரு குடும்ப உறுப்பினர் மட்டுமல்ல; அவள் ஒரு நேசத்துக்குரிய தோழியாகவும், என் ஆன்மீகப் பயணத்தில் வழிகாட்டியாகவும் இருந்தாள். சிறு வயதிலிருந்தே, புனித அந்தோணியார் பங்கு மற்றும் எங்களின் சிற்றாலயமான ஆண்டவரின் விண்ணேற்ற சிற்றாலயம் ஆகியவற்றில் தமிழ் திருப்பலி மற்றும் அ.தி.ச. இறைவேண்டல்களுக்கு நான் அவளுடன் சென்றேன். இந்த ஆண்டுகளில் தான், எங்கள் நம்பிக்கை சமூகத்திற்கான அவரது நம்பமுடியாத அர்ப்பணிப்பை உருவாக்கமாகக் கண்டேன். ஒன்றாக, நாங்கள் ஒருவருக்கொருவர் இறை வார்த்தை அறிவைப் பற்றி வினாடி வினாடியாக பகிர விரும்பினோம், அதிக கேள்விகளுக்கு யார் சரியாக பதிலளிக்க முடியும் என்று ஆர்வத்துடன் போட்டியிட்டோம். என் நம்பிக்கையைப் பற்றிய சந்தேகம் அல்லது நிச்சயமற்ற தருணங்களில், நான் எப்போதும் அவளிடம் திரும்புவேன்-அவளே எனது முதல் அழைப்பு, எப்போதும் திறந்த இதயத்துடன் கேட்கத் தயாராக இருந்தாள்.

இளைஞனாக இருந்தபோதும், என் அத்தை ஆலய நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். பலருக்கு வாகனங்கள் இல்லாத ஒரு காலத்தில், அவர் தனது சக இளைஞர்கள் மற்றும் அ.தி.ச. உறுப்பினர்களுடன் செபிக்க மற்றும் செபமாலைகளில் பங்கேற்க நீண்ட தூரம் நடந்து செல்வார். ஒவ்வொரு இயேசு பிறப்பு பெருவிழாவிலும் எங்கள் அ.தி.ச. கிறிஸ்மஸ் பஜனை பாடலுக்காக ஒன்றாக சேர்ந்து, பாடலில் எங்களுக்கு பயிற்சி அளிக்க என் அத்தை முன்முயற்சி எடுப்பார். எங்கள் ஆலய விருந்து ஒன்றின் போது, 100 கேள்விகளுக்கும் சரியாகப் பதிலளித்து பைபிள் வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். மேலும், அவர் புனித அந்தோனியார் பங்கில் மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றினார், அங்கு அவர் மறைக்கல்வி குழுவின் அன்பான ஒருங்




கிணைப்பாளராக இருந்தார். ஞாயிற்றுக் கிழமைகளில் எனது சொந்த மறைக்கல்வி வகுப்புக்குப் பிறகு, நான் அவள் அருகில் அமர்ந்து, அவளுடைய கற்பித்தல் பாணியைப் பாராட்டினேன், அவளுடைய மாணவர்கள் அவளை "ஜாக்கி டீச்சர்" என்று அன்பாக அழைத்தார்கள். எனது புது நன்மை தயாரிப்பின் போது அவரது மாணவர்களில் ஒருவராக நான் அதிர்ஷ்டசாலியாக இருந்தேன், அங்கு அவரது கலகலப்பான வகுப்புகள் பகிர்வு, விவாதம், சிரிப்பு மற்றும் ஆர்வமுள்ள விசாரணையை ஊக்குவித்தன. ஒவ்வொரு கேள்விக்கும் அவளிடம் பதில் இருந்தது, கற்றல் மற்றும் நம்பிக்கையின் சூழலை வளர்த்தது.

தொடர்ச்சி, அடுத்த வாரம்.

**05 மார்ச் 2025**
**திருநீற்றுப் புதன்**

# நற்கனி கொடுக்கும் மரங்களாக வாழ்வோம்

தவக்காலத்தின் ஆரம்பக் கால நிலைக்கு நாம் நெருங்கி வருகிறோம். அடுத்தவரைக் குறைக் கூறுவது, குற்றம் சாட்டுவது, பழிச்சொல்வது போன்றவை பெரும்பான் மையோரின் இரண்டாம் இயல்பாகவே இருக்கின்றது. “சொல், மனிதரின் உள்ளப் பண்பாட்டைக் காட்டுகின்றது” என்று இன்று முதல் வாசகம் நமக்கு வெளிப் படுத்துகின்றது. மனிதனிடமிருந்து வெளிப் படும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவன் மனதில் உள்ள எண்ணங்களை வெளிப்படுத்துகின்றன. உரையாடல், பேச்சு என்று ஒன்று மட்டும் இல்லையெனில் மனித வாழ்வு மயானமாகத்தான் காட்சியளிக்கும். இன்றைய சீராக் ஞான நூல் வழியாகப் பேசும் போது ஒருவருடையப் பேச்சைக் கொண்டே அவரது குணத்தை அறிந்து கொள்ளலாம் என்கிறது.

இதில் சில வேளைகளில் நாம் சிலுவைப் பாதையின் முதல் நிலைக்குப் பலரை நாம் தள்ளி விடுகிறோம். இன்றைய வாசகங்கள் பிறரைத் தீர்ப்பிடாமல் எப்படி புரிந்துக்கொள்வது, எது நிலையானது, எது நிலையற்றது என்பதோடு தினமும் சுய ஆய்வு செய்து தம் குறைகளை இனம் கண்டு திருத்திக் கொள்ளும் புனித வழியைக் காட்டுகிறது. சாவு முற்றிலும் ஒழிந்தது என்று புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் கூறுகிறார். சாவு உடல் சார்ந்த ஒன்றல்ல, தீய இயல்பின் ஒட்டுமொத்த வடிவாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. தூய ஆவியார் குடிகொள்ளும் தம் உடலின் மனச்சான்றின் குரலுக்குச் செவிமடுப்போம்.

இன்றைய நற்செய்தியில் மரமும், கனியும் உவமையின் மூலம் நமது வார்த்தைகளாகிய கனிக்கும் இயல்பாகிய மரத்திற்கும் உள்ள தொடர்பை எடுத்துரைக்கிறார் இயேசு. வாழ்நாள் முழுவதும் நல்ல வார்த்தைகளாகிய கனிகளை உண்ணாமல், புளிப்பும் துவர்ப்பும் நிறைந்த காய்களாகிய தீய சொற்களைப் பயன்படுத்துவோரே இன்று நம்மிடையே உள்ளனர். நல்லார் நல்லதையேப் பேசுவர், உள்ளம் நல்லதாக இருந்தால் ஒருவரது சொல்லும் செயலும் நல்லவையாக இருக்கும்” கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை, ஒவ்வொரு மரமும் அதன் கனியாலே அறியப்படும்” என்று நற்செய்தி வாசகம் கூறுகிறது.

நாம் கடவுளின் சாயலாக படைக்கப் பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தால் நாம் நற்கனி கொடுக்கும் மரங்களாக வாழ்வோம். இந்த தவக்காலத்தில் உண்மையைப் பேசுவோம், நல்லதையேப் பேசுவோம். சொல்லில் தூய்மை இருந்தால் நமது உள்ளமும் தூய்மையாக இருக்கும்., நம் பாவங்களைப் பிறர் மீது சுமத்தாமல் மனம் வருந்தி மன்னிப்புப் பெற்று, மகிழ்வோடு வாழ்வோம். தன்னை மற்றும் நல்லவன், நல்லவள் என எண்ணுவது அறியாமையின் உச்சம், அகங்காரத்தின் வெளிப்பாடு, என்னிடம் உள்ள குறைகளைக் களைந்து புனித வழியில் நான் நடக்கும் போது, எனது குடும்பமும் மாறும், திருஅவையும் மாறும் புனிதமடையும். இனியாவது அடுத்தவரைப் புண்படுத்தும், அவமானப்படுத்தும் எதையும் தவிர்த்து தவறே செய்திருந்தாலும் அவர்களையும் இயேசுவைப் போல இரக்கத்துடன் நடத்துவோம்.

-சவரிநாதன், சுங்கைபட்டாணி

**பொதுக்காலம் 8ஆம் வாரம் - ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | சீராக் 27: 4-7 |
| திரு.பாடல் | 92:1-2.12-13.14-15 |
| 2 வாசகம் | 1கொரி 15: 54-58 |
| லூக்கா | 6: 39-45 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 4**